யாழ் நூலகம் - ஒரு பண்பாட்டுப் படுகொலை

தமிழ் மக்களின் தேசியச் சொத்தாயிருந்ததும் சிங்கள அரசினால் தீயிட்டு சாம்பராக்கப்பட்டதுமான யாழ் நூலகம் தொடர்பான ஆவணப் படமொன்றைத் தயாரித்திருக்கும் சோமீதரனுடனான நேர் காணல்.

யாழ்ப்பாண நூலகம் தொடர்பாக ஆணவப் படம் செய்ய வேண்டுமென ஆர்வம் எப்படி உருவானது ?

என் தலைமுறைக்கு - எனக்கு - யாழ் நூல் நிலையத்தை காணும் வாய்ப்பு ஆரம்பத்தில் கிடைத்த போதெல்லாம் அது நூலகம் என்ற புரிதல் அற்று அது ஒரு போராளிகளின் நிலையாகவே அறிமுகமாகியது. பின்னர் கோட்டை கைப்பற்றப்பட்ட பின்னரே அது குறித்தும் அதன் அரசியல் வரலாறு குறித்தும் அறிந்து கொள்ள முடிந்தது. எங்கள் தலைமுறை அந்த நூலகத்தின் சாம்பல்களில் தவழ்ந்தது என்றும் சொல்லலாம். தமிழருக்கெதிராக மிகப் பெரும் வன்முறை நூலக எரிப்பு - அதன் சாம்பல்களில் தான் எம் தலைமுறை பிறந்தது.

நூலக எரிப்பென்பதை நான் ஒரு படுகொலையாகவே பார்க்கின்றேன். அதுவும் திட்டமிட்ட படுகொலை.

எனக்கு நூலகம் தொடர்பான நேரடிப் பரீச்சயம் இல்லை. அதனை பயன்படுத்தியதும் இல்லை. ஆனால் நான் இதனை எவ்வாறு உணர்கிறேன் என்றால் - யாழ் நூலகம் என்பது தமிழர்களின் ஒரு பண்பாட்டினதும் கல்விச் செறிவினதும் குறியீடாக இருந்தது. உண்மையில் யாழ் நூலகம் மட்டுமன்றி அனைத்து ஊர்களிலுமிருந்த நூல்நிலையங்கள் மற்றும் வாசிக சாலைகள் என்பவை யாழ்ப்பாணத்தின் குறியீடுகளாக இருந்தன. யாழ்ப்பாணத்தில் அவற்றிற்கு விசேட கவனம் இருந்தது. இவற்றின் மையப் புள்ளியாக பொது நூலகத்தைச் சொல்ல முடியும்.

உடனடிக் காரணம் எனச் சொல்ல வேண்டுமானால் நான் பிறந்த பத்தொன்பது நாட்களில் எரிக்கப்பட்ட நூலகம் தொடர்பாக நான் ஒரு ஆவணப் படத்தை எடுக்க வேண்டும் என ஏற்பட்ட ஆவல் தவிர பத்திரிகைச் சூழலுக்கு வந்தபின்னர் அறிந்து கொண்ட நூலகம் தொடர்பான செய்திகள் கல்வியாளர்களின் கருத்துக்கள் என்பவை ஏற்படுத்திய தாக்கம் இவற்றை சொல்ல முடியும்.

யாழ் நூலகத்தின் அரசியல் குறித்து சொல்லுங்கள் ?

நூலகம் எரிக்கப் பட்டதுதான் அரசியல் என பலர் நினைக்கிறார்கள். அது உண்மை. ஆனால் அதையும் தாண்டி நூலகமே ஒரு அரசியலாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. இவ் ஆவணப்படத்திற்காக தேடலை அதிகரித்த போது எனக்கு அது குறித்த நிறைய விடயங்கள் தெரிய வந்தன. நூலகம் ஆரம்பிக்கப் பட்ட போதே அரசியல் தொடங்கிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். பாதிரியார் லோங் அவர்களின் முயற்சியால் நூலகம் கட்டப்பட்ட 1960 களில் அல்பிரட் துரையப்பா திறந்து வைக்கின்றார். உண்மையில் அதனை அல்பிரட் துரையப்பா தனது தேர்தல் அரசியலுக்குப் பயன் படுத்தினார் என்றுதான் சொல்ல வேண்டும். அதன் மூலம் இரண்டாவது தடவையாகவும் அவர் மேயர் ஆகின்றார்.

இதன் பிறகு 81 இல் நூலகம் எரிக்கப்படுகிறது. உண்மையில் தமிழ் தேசியத்திற்கெதிரான சிங்கள அரசின் நடவடிக்கைகளில் யாழ் நூலகம் தமிழ் தேசியத்தின் ஒரு வடிவமாக குறியீடாகப் பார்க்கப்பட்டது. இதன் மூலம் தேசிய அரசியலிலும் தமிழர்களின் பிரதிநிதியாக நூலகம் உருவெடுத்தது.

இந்த இடத்தில் - கோட்டை முற்றுகைச் சமரின் போது - யாழ் நூலகம் - போராளிகளின் காப்பரணாக ஒரு போராளியாக கோட்டைச் சமரின் ஒரு குறியீடாக விளங்கியதையும் குறிப்பிட வேண்டும்.

ஆவணப்படம் எது குறித்து பேசுகிறது ?

இந்த ஆவணப்படம் முழுவதுமே ஒரு வரையறைக்கு உட்படாத ஒட்டுமொத்த தமிழர்களுக்கான வரலாற்று அழிவினைப் பற்றி பேசுகிறது. அதே நேரத்தில் இது தமிழர்களையும் தாண்டி சிங்களவர்களுக்கான இழப்பு என்பதையும் பதிவு செய்திருக்கிறோம். நூலக வரலாறு அதன் எரிப்பு தொடர்பான விபரங்கள் நேரடிச் சாட்சிகளின் தகவல்கள் என எல்லாவற்றையும் சேர்த்திருக்கிறோம். அதை தொடர்ந்து 84 இல் நூலகம் திருத்தப்பட்டமையும் மீளவும் 85 இல் இடிக்கப்பட்டதென - நூலகம் எரிக்கப்பட்டதன் பின்னான 27 வருட கால போரில் மக்களுக்கும் நூலகத்திற்கும் போருக்குமிடையிலான ஊடாட்டம் என பதிவு விரிகிறது.

நூலக மீள் புனரமைப்பு குறித்தும் ஆவணப் படம் சொல்கிறதா ?

ஆம். ஆவணப்படத்தில் நூலக மீள் புனரமைப்புக் குறித்தும் பேசுகிறோம். அதாவது நூலகம் எரிக்கப்பட்டது ஒரு அரசியல் எனப் பார்த்தோம். பின்னர் அது புனரமைக்கப் பட்டதும் ஒரு அரசியல்தான் என்பதைச் சொல்கிறோம். யாழ்ப்பாணத்தில் யுத்தத்தில் எல்லாமே அழிந்து போயின. சாவகச்சேரியை கிரோசிமா நாசகாகி போன்றவற்றுடன் ஒப்பிடக் கூடிய அளவில் அழிந்துபோயிருந்தது. ஆனால் இந்தப் பிரதேசங்களை மீள் நிர்மாணம் செய்வதுகுறித்துயோசிக்காத சந்திரிகா உடனடியாக யாழ் நூல் நிலையத்தை புனரமைக்க திட்டமிடுகிறார். மிகப் பெரிய விளம்பரங்களோடு செங்கல்லும் புத்தகங்களும் என்ற திட்டத்தை அவர் ஆரம்பிக்கிறார். இத் திட்டத்தில் அப்போது கல்வி அமைச்சராயிருந்த ரிச்சட் பத்திரணவும் ஒரு உறுப்பினராக இருந்தார். இந்த திட்டத்தில சேர்த்த புத்தகங்களும் செங்கல்லுகளும் காலியிலும் ஒரு நூலகமாக உருவெடுத்தது வேறு கதை.

சிங்கள தேசியம் ஒரு காலத்தில் செய்த கோரப் படுகொலையின் அடையாளத்தை இல்லாதொழிப்பது சந்திரிகாவிற்கு அவசிய மாயிருந்தது.

ஆனால் துரதிஸ்டவசமாக அப்போதைய தமிழ்க்கட்சிகள் இது குறித்து அலட்டிக் கொள்ளாத காரணத்தினாலும் இது குறித்து யாழ்ப்பாண மக்கள் தமது கருத்தை வெளிப்படையாக உணர்த்துவதற்கு வாய்ப்புகள் மறுக்கப்பட்டிருந்ததாலும் நூலகம் புனரமைக்கப்பட்டது.

மீள் புனரமைப்பில் அது மீளவும் திறக்கப் படக் கூடாதென்பதற்காக சாதி ஒரு காரணமாக இருந்தது என கூறப் படுகிறதே?

அதன் திறப்பு விழாவை கூட ஆனந்த சங்கரி அவர்கள் தன் அரசியலுக்குப் பயன்படுத்திக் கொண்டார். அதில் செல்லன் கந்தையன் என்ப வரை அவர் பகடை காயாக்கிக் கொண்டார். வெளிநாடுகளில் இப்போது இருக்கின்ற நமது முன்னாள்கள் அதற்கு சாதிய அடையாளம் பூசி தமது நிறுவல்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்காக செல்லன் கந்தைரை திறக்க விட வில்லை. காரணம் சாதி என சொன்னாலும் - உண்மையில் - யாழ் நூலகத்தை திறக்க இருந்தவர் இன்னமும் யாழ்ப்பாண உட்ச பட்ச சாதியத்தின் மிச்ச சொச்சமாக இருக்கின்ற ஆனந்த சங்கரி ஐயா தான். (இந்த இடத்தில் யாழ்ப் பாணத்தில் சாதி இல்லை என நான் சொல்ல வரவில்லை)

யாராவது ஒரு கல்லறைக்கு வெள்ளையடித்து திறப்பு விழா செய்வார்களா? மேள தாளங்களோடு அனைவருக்கும் அழைப்பிதழ் அனுப்பி அதை கொண்டாடுவார்களா? யாழ் நூலகம் ஒரு கல்லறை - சமாதி - அது சாகடிக்கப்பட்டு விட்டது. நுஃமான் கவிதையில் சொல்கிறார். புத்தர் யாழ்ப்பாண நூலக வாயிலில் சுடப் பட்டு எரிக்கப்பட்டார். அந்த வலி நிறைந்த விடயத்தினை ஒரு விழாவாக செய்வது சரியில்லை என்பது அங்கிருந்தோரின் கருத்து. அதை நான் நேரடியாக ஒரு செய்தியாளனாக அறிந்து கொண்டேன்.

ஆவணப் பட உருவாக்கம் குறித்த அனுபவங்களைச் சொல்லுங்கள்?

2006 இன் மே யூன் மாதங்களில் இதற்கான படப்பிடிப்புகளைத் தொடங்கினேன். அப்போது மென் தீவிர யுத்தம் யாழ்ப் பாணத்தில் ஆரம்பித்து விட்டிருந்தது. யாழ்ப் பாணத்தில் ஊடகவியலாளர்களுக்கு இருந்த அச்சுறுத்தல்கள் காரணமாக பகிரங்கமாக பணியாற்ற முடியாதிருந்தது. பிஸ்கட் பெட்டிக்குள் கமெராவை மறைத்து வைத்து எடுத்துச் சென்ற சம்பவங்களும் உண்டு. கொழும்பிலிருந்து படப்பிடிப்பாளர் ஒருவரை அழைத்துச் செல்ல ஒழுங்கு செய்திருந்த போதும் இறுதி நேரத்தில் அவரால் வரமுடியாமல் போனதால் - படப்பிடிப்பினையும் நானே செய்து கொண்டேன். உங்களுக்குத் தெரியும் யாழ் நூலகம் இராணுவ வலயமொன்றினில் அமைந்திருக்கின்றது. முட்கம்பிவேலிகளும் சோதனைச் சாவடிகளும் நிறைந்த பிரதேசம் அது.

தற்போதையபடப்பிடிப்பினை விட, ஆவணத் திற்குத் தேவையான பழைய காட்சிகளை பெறுவதில் சிரமமிருந்தது. அதற்காக நிறைய காலம் காத்திருக்க வேண்டியேற்பட்டது. இயல் பாகவே ஆவணப்படுத்தும் சிந்தனையற்ற யாழ்ப்பாணச் சூழலில் நூலகம் தொடர்பான தகவல்களைப் பெறுவது பெரும் சிரமமாயிருந்தது.

அடுத்தது ஆவணப் பட உருவாக்கலுக்கான பொருளாதாரம் குறித்துப் பேச வேண்டும். சரிநிகர் சிவகுமார் பெரும் அளவில் உதவினார். எங்கள் மத்தியில் சினிமா உருவாக்கும் ஆவல் பெருமளவில் உள்ள போதும் ஆவணப் படங்கள் குறித்த முயலுகைகள் இல்லை. இந்த நிலையில் யாழ் நூலகம் தொடர்பாக ஒரு ஆவணத்தை எடுப்பது என நானும் சரிநிகர் சிவகுமாரும் இணைந்தே திட்டமிட்டோம். ஆரம்பத்தில் நமது சொந்தப் பணத்திலேயே படப்பிடிப்புகளை மேற்கொண்டோம்.

கடந்த இரண்டு வருட முயற்சியில், தகவல் சேகரிப்பும், பொருளாதார சேகரிப்பும் கடுமையான முயற்சிகளாக எமக்கு இருந்தன. பின்னர் தயாரித்தல் வேலைகளுக்காக சென்னையில் அதற்குரிய கலையகங்களைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. ஆவணப்படங்களுக்கென தனியான கலையகம் ஏதுமில்லாத நிலையில் தமிழ்ச்சினிமா பயன்படுத்தும் கலையகங்களையே பயன்படுத்தியிருந்தோம். தமிழ் சினிமா இன்று கோடிகளில் புரண்டு கொண்டிருக்க - இத்தகையகலையகங்களுக்கு ஏற்படும் செலவினை நீங்களே அறிந்து கொள்வீர்கள்.

இத் தயாரித்தல் வேலைகள் நடந்து கொண்டிருந்த போது, புலம் பெயர்ந்த நாடுகளில் இருந்து சில நண்பர்கள், - என் முகம் தெரியாத நண்பர்கள் கூட - தாமாக முன்வந்து ஓரளவுக்கு பொருளாதார உதவி செய்திருந்தார்கள்.

இத்தகைய நிலைகளைத் தாண்டி இன்று இவ் ஆவணப்படம் வெளியாகியிருக்கிறது. உலகின் பல நாடுகளில் திரையிடப் படுகிறது. ஆயினும் இந்த ஆவணப்படம் இவ்வாறு இருக்க வேண்டும் என நான் ஆரம்பத்தில் நினைத்திருந்த அளவிற்கு என்னளவில் இது வரவில்லையென உணர்கிறேன். இதற்கு தகவல்களைத் தேடுதலிலும் பொருளாதாரத்தை தேடுதலிலும் ஏற்பட்ட சிரமங்களே காரணமாயிருந்திருக்கின்றன. எனினும் இது ஒரு முதல் வரைபு - என்கின்ற வரையில் நான் திருப்தியுறுகிறேன்.

செவ்வி : சஜீ

கடந்த 65 வருட கால சினிமா வாழ்க்கையில் என் மக்களுக்காக நான் என்ன செய்தேன் என சிந்தித்து பார்க்கின்றேன். இந்த நூலகத்தைப் பயன்படுத்தியவன் அதனை அனுபவித்தவன் என்ற காரணங்களிருப்பினும் அது குறித்து நான் எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை. ஆனால் நூலகம் எரிக்கப்பட்ட போது பிறந்த குழந்தை அது தொடர்பான ஆவணப் படத்தை எடுத்து என் கைகளில் தரும் போது என் இயலாமையை உணர்கிறேன்.

- இயக்குனர் பாலு மகேந்திரா

This firm is authorised by the legal services commission to provide free legal advice for you for all types of criminal matters.

- Free 24 Hrs Police Station Attendance
- Magistrates, Crown Court & Court of Appeal Representation
- Terrorism Cases
- Serious Crime, Murder/Attempted Murder, GBH
- Serious Fraud, Money Laundering, Major Scale Drug Importation
- Sexual Offences Including Rape
- HM Customs & Excise Cases
- Appeal & CCRC Cases
- Prison Law Representation

Sponsorship and Power of Attorney

We speak Tamil, French and Mauritian Creole

Criminal Defence Service

RAJ LAW SOLICITORS

Community Legal Service

"Specialist advice on all legal matters in a friendly environment"

உங்களுக்கு என்ன இடர் வந்தாலும் சட்டத்துடன் அதனைச் சந்திக்க நட்புணர்வுடன் நாம் இருக்கின்றோம்

Experts in Criminal Defence Service (UK)

24 hour police station **emergency** service

M: 07947 641 876 / 07956 067 587 T: 020 8516 7730/020 3133 0000

Trident Business Centre, 89, Bickersteth Road, Tooting Broadway, London SW17 9SH

Immigration Law Specialists

- Fresh Asylum Application / Rule 39 European application
- Entry Clearance /Overseas Appeal
- Student Visa, Extension & Appeal
- Judicial Review & Emergency Injunction Application (24 Hrs)
- Work Permit
- Highly Skilled Migrant Programme
- Family & Other Dependant Relatives' Visa
- EU Dependant Visa/Marriage Application
- Investor / Business Visa, Civil Partnership Visa
- Indefinite Leave to Remain under the 5,7,10 & 14 year rules

Property

- We deal with Residential (Flats, House) and Commercial Conveyancing
- Purchase of Off Licence, Restaurants, Groceries, Right to buy